ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2298/46 - 2022 සැප්තැම්බර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.09.22
*2298/46 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் நிவித்திகல பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*நிவித்திகல பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், நிவித்திகல பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட பொல்வத்தலாகே பியசேன என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான நிவித்திகல பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ரணசிங்க ஆரச்சில்லாகே அஜந்த சிசிர குமார ரணசிங்ஹ என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*நிவித்திகல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான சுரங்க அம்பகஹதென்னெ ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ரணசிங்க ஆரச்சில்லாகே அஜந்த சிசிர குமார ரணசிங்ஹ என்பவர் நிவித்திகல பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**சுரங்க அம்பகஹதென்னெ,**
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*நிவித்திகல பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*இரத்தினபுரி*
*2022, செத்தெம்பர் 21.*

EOG *09-0240*

1A - G 37566 — 16 (2022/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*